விலை ஒரு அணா

REGD. M. 46[illegible]

# திராவிடநாடு

மலர் 7 | 15–8–48 | இதழ் 9

# அறப்போர் தொடங்கி விட்டது

10—8—48 காலை 9-மணிக்கு சென்னை தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளிக் கூடத்தின் முன் இந்தி எதிர்ப்பு மறியல் தொடங்கப்பட்டது. இந்தி எதிர்ப்பு முதல்சர்வாதிகாரி தோழர் அண்ணாத்துரை, படைத்தலைவர் தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் முதல்நாள் மறியலுக்கு வந்த பத்துத் தொண்டர்களையும் ஊர்வலமாக அழைத்து வந்தார். ஊர்வலம் காசிவிசுவநாதர் கோயில் வெளியில் இருந்து புறப்பட்டு, பல ஆயிரக்கணக்கான மக்களின் அமைதியான 'இந்தி ஒழிக,' 'தமிழ் வாழ்க' என்ற ஒலிகளுடன் பள்ளிக் கூடத்தை வந்தடைந்தது.

தொண்டர்களும், படைத்தலைவர் சி. டி. டி. அரசு அவர்களும் அமைதியான முறையில் அன்புமொழிகளால், பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் மாணவர்களை இந்தி படிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர்.

பள்ளிக்கூடத்துக்குச் சென்ற மாணவர்களில் எழுபேர், தாங்கள் இந்திபடிக்க மாட்டோம் என்பதற்கறிகுறியாகப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினர்.

பள்ளிக்கூடம் துவங்கியதும் பத்தரை மணிக்குத் தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் தொண்டர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டுச், சிவஞானம் பார்க்கை அடைந்து, பிற்பகல் 2-15-க்கு மறியல் தொடங்கப்படும் என்பதை அறிவித்ததும் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

மீண்டும் பிற்பகல் 2-15-க்கு மறியல் தொடங்கியது. காலையில் நடைபெற்றது போலவே, தொண்டர்கள், அமைதியாக அணிவகுத்து நின்று மாணவர்களை இந்தி படிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர்.

பின்னர், தொண்டர்களும் பல ஆயிரக்கணக்கான மக்களும் ஊர்வலமாகப் புறப்பட்டு, திருப்பள்ளித் தெரு, முல்லாசாய்புத்தெரு, ஆதிஊர் முத்தய்யமுதலித்தெரு, புரஷ்யுகார் லுநாயுடு தெரு, பெசின்பிரிட்ஜ் தெரு, பெத்துநாயக்கன்தெரு ஆகிய வீதிகளின் வழியாகச் சென்று, சிவஞானம் பார்க்கை அடைந்ததும், தோழர்கள் அண்ணாத்துரை, அரசு ஆகியோர், இந்தி எதிர்ப்புப்போரை வெற்றிகரமாக நடத்த ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றிசெலுத்தி, மறுநாள் இந்தி எதிர்ப்பு மறியல்நடக்கும் என்பதைத் தெரிவித்தவுடன் கூட்டம் அமைதியாகக் கலைந்து சென்றது.

போலீஸ் கமிஷனர் உட்படப் பல போலீஸ் அதிகாரிகள், அமைதியாக நடைபெற்ற ஊர்வலத்தையும் மறியல் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

பள்ளிக்கூடத்தின் இருபக்கமும் சுமார் நூறடி தொலைவில் போலீஸ்காரர்கள், காலையிலும் மாலையிலும் பல ஆயிரக்கணக்கில் கூடி நின்ற இந்தி எதிர்ப்புக்கு ஆதரவு பெருவாரியாக உள்ள தென்பதைச் சர்க்கார் உணரும்படி செய்தனர்.

மறியல் செய்தவர்களின் விவரம்;-

1. தோழர் சி. டி. டி. அரசு
2. தோழியர் தனலட்சுமி
3. திராவிடமணி (தனலட்சுமியின் புதல்வன்)
4. என். சுப்ரமணியன்
5. எம். அனந்தப்பன்
6. டி. டி. பாண்டியன்
7. என். கிருட்டிணன்
8. எஸ். நடராசன்
10. கலைச்செல்வன்
11. [illegible] மாரியப்பன்

மறியல் செய்த தொண்டர்களுக்கும் பொதுமக்களும் பலர் மாலைகள் அணிவித்துத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர்.

மூன்றுநாள் இந்தி எதிர்ப்புக் காப் [illegible] 'படைத்தலைவ'ராக இருந்த [illegible] திருமாழ்பாளையம் [illegible] கோவிலில் ஊர்வலம் தொடங்கும் இடத்துக்குச் சென்று [illegible] சுமி அம்மையாருக்கு மாலை சூட்டிச் செந்தமிழ்ப் பாடல் பாடி ஊர்வலத்தைத் தொடக்கி வைத்தார்கள்.

11, 12, 13 ஆகிய தேதிகளிலும் மறியலும் ஊர்வலமும் [illegible] அமைதியான முறையில் நடை பெற்று வருகின்றது.

வெளியூர்களிலும் மறியல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்தி எதிர்ப்புக் குழுவினர் செய்து வருகின்றனர்.

# நாலு நாட்களுக்குள்!

★

“ஏட்டில் எழுதுவது ஒன்று.”

“நடைமுறையில் செய்வது இன்னொன்று.”

“கொள்கையளவில் உண்மை!”

“நடைமுறையில் அப்படி இல்லை.”

“இந்துஸ்தானி கற்றுக்கொடுப்பதற்கு மட்டும் வசதி செய்யப்பட்டிருக்கிறது”

“மற்றப் பாஷைகளுக்கு வசதி செய்யவில்லை”

“இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்துஸ்தானியைக் கற்றுத்தான் ஆகவேண்டும்”

“வேறுவழி கிடையாது”

“இதை நிர்ப்பந்தம் என்று அழைக்கக் கூடாதென்றால் வேறு என்னவென்று அழைப்பது?”

“நிர்ப்பந்தத்தின் கீழ் இந்தி கற்பதைப் பெரும்பான்மை தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பது வெளிப்படை.”

“முதலில்செய்த ஏற்பாடு பொது ஜன அபிப்பிராயத்தை ஒட்டியிருந்தது.”

“யாருடைய தூண்டுதலின்பேரில் முதல் உத்தரவைக் கைவிட்டார்?”

“காங்கிரசுக்குள்ளேயே சில அவசரக் குடுக்கைகள் துள்ளிக் குதித்திருக்கலாம்.”

“பொதுஜன அபிப்பிராயத்தை மதித்துப் போக்கை மாற்றிக்கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.”

“கொஞ்சங்கூடக் கூசாமல் இரண்டாவது உத்தரவைக் கிழித்தெறிய வேண்டும்.”

*சர்க்காரின் கட்டாய இந்தித் திட்டம் பற்றி இவ்வளவு கண்டனங்களைக் கிளப்புவது யார்? “ஏட்டில் எழுதுவது ஒன்று; நடைமுறையில் செய்வது இன்னொன்று” என்று சர்க்காரைச் சிறிதும்மதியாமல் கண்டனச் சொற்களை வீசுவது யார்? “காங்கிரசுக்குள்ளேயே சில அவசரக் குடுக்கைகள் துள்ளிக் குதித்திருக்கலாம்” என்று காங்கிரசக்காரர்களா சொல்லுவார்கள்? ஒருபோதும் அப்படிச் சொல்லவே மாட்டார்கள். சொன்னால் தீர்ந்தது! உடனே ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களை விலக்கிவிடுவார்கள்! பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுப் பதவியில் அமர்ந்திருக்கும் சர்க்கார் செய்யும் காரியங்களை பொதுமக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செய்யப்படுகிறதென்று கூறி யார் கண்டிக்க முடியும்? காங்கிரசுக்குப் புறம்பான கட்சிகளில் இருப்பவர்கள்தான் இப்படிக் கண்மண் தெரியாமல் கண்டிப்பார்கள். வேறு யாருக்கு இவ்வளவு துணிச்சல் பிறக்கும்? இப்போது இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டிருக்கிறார்களே, திராவிட கழகத்தார், அவர்கள்தான் இவ்வாறு சர்க்காரை வேண்டுமென்றே வைதிருப்பார்கள் என்று நினைப்பீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. காங்கிரசை முழுக்க முழுக்க ஆதரிக்கும் ஒரு காங்கிரஸ் ஏடே இந்தக் கண்டனச் சொற்களை வீசி இருக்கிறது — சர்க்காரின் இந்தித் திட்டத்தைக் கண்டித்திருக்கிறது. சென்னையில் இருந்து வெளிவரும் “தினத்தந்தி” என்ற பத்திரிகை 6—8—48-ல் இந்தக் கண்டனச் சொற்களை வீசி ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது. ‘தினத்தந்தி” எழுதிய முழுவாசகங்களையும் அப்படியே கீழே தருகிறோம்.*

*“இந்திகட்டாயபாடமல்ல, இஷ்டமிருந்தால் படிக்கலாம்; இல்லாவிட்டால் வேறு மொழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று சர்க்கார் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஏட்டில் எழுதியிருக்கும் திட்டத்தை பார்ப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அமுல் நடத்தும் தோரணையையும் பார்ததால் சர்க்காரின் வியாக்கியானத்தால்ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கிறது. திருத்தி அமைக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி மாணவர்கள் முதல் பாரத்திலிருந்து மூன்று மொழிகளை கட்டாயமாகப் படித்தாக வேண்டியிருக்கிறது. பிரதேச பாஷையை முதல் பாஷையாகவும், ஆங்கிலத்தை மூன்றாவது பாஷையாகவும் கற்பதுடன் வேறொரு மொழியை இரண்டாவது பாஷையாகக்கற்றாகவேண்டும். இந்தஇரண்டாவது பாஷையைக் கற்பதில்தான் தகராறு வந்திருக்கிறது.*

*இரண்டாவது பாஷையின் கீழ் இந்துஸ்தானி, சமஸ்கிருதம், அராபி பாஷைகள், இந்திய பாஷைகள் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றை மாணவர்கள் எடுத்துக்கொண்டு வேண்டும். இந்த பாஷைகளில்குறிப்பிட்ட ஒன்றைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அந்த முறையில் பார்க்கப் போனால் இந்துஸ்தானி ஒரு இஷ்டபாடந்தானே என்று வாதிக்கப்படுகிறது.*

கொள்கையளவில் அது வாஸ்தவமே, ஆனால் நடை முறையில் அப்படிச்சொல்வதற்கில்லை. பொதுவாக எல்லாபள்ளிக்கூடங்களிலும் இந்துஸ்தானி சொல்லிக் கொடுப்பதற்கு மட்டும் வசதி செய்து தருகிறார்களே ஒழிய இரண்டாவது தொகுதியிலுள்ள மற்ற பாஷைகளுக்கு வசதி செய்து தரவில்லை. எனவே இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்துஸ்தானியைக் கற்றுத்தான் ஆகவேண்டும்; வேறு வழி கிடையாது! இதை நிர்ப்பந்தம் என்று அழைக்கக் கூடாதென்றால் வேறென்னவென்று அழைப்பது.

*நேரடியாக இருந்தாலும் சரி, மறைமுகமாக இருந்தாலும் சரி,* நிர்ப்பந்தத்தின்கீழ் இந்தி கற்பதை பெரும்பான்மை தமிழர்கள்விரும்பவில்லை என்பது வெளிப்படை.

*இந்தியைக் கட்டாயமாகக்கற்றுத்தான் ஆகவேண்டுமென்பதற்குப் போதுமான காரணம் எதுவும் கிடையாது. சர்க்கார் விடுத்திருக்கும் அறிக்கையில்கூட இந்தி தேசிய மொழியாகப் போவதால், தமிழர்களில் பலருக்கு இந்தி தெரிந்திருப்பது நல்லது என்றுதான் கூறுகிறார்களேயொழிய தெரிந்துதான் ஆக வேண்டும் என்று சாதிக்கவில்லை. வடநாட்டுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வதற்கு இந்தி தெரிந்திருப்பது நல்லது என்று சர்க்கார் காரணம் காட்டியிருக்கிறார்கள்.*

*மக்களின் எதிர்ப்பைக்கூட அலட்சியம் செய்து திணிக்கும் அளவுக்கு இந்தி அவசியந்தானா? இதை சர்க்கார் யோசித்துப் பார்க்கவேண்டும்.* இன்றைக்கேல்லாம் இருந்தால்எத்தனை பேர் வடஇந்தியாவுக்குப் போய் புழங்கப்போகிறார்கள்! *வியாபார நிமித்தமோ, உத்தியோகநிமித்*

மோதான் தமிழர்கள் வடநாட்டிற் து போகும் அவசியம் ஏற்படும்.

அப்படிச் செல்பவர்கள் குறைந்த ட்சம் எஸ். எஸ். எல். ஸி. வரையி லாவது படித்திருப்பார்கள் என்று ராளமாக எதிர்பார்க்கலாம். அவர்களுக்கு இந்தியில் பரிச்சயம் ற்படவேண்டுமானால் 4-வதுபாரத் திலிருந்து இந்தி கற்றுக்கொள்ள ற்பாடு செய்தால் போதும். முத லாவது பாரத்திலிருந்தே பழக்கத் தில் இல்லாத பாஷையைத்திணித்து ளம்மூளைக்கு அதிகவேலை தர வேண்டிய அவசியமில்லை.

சர்க்கார் உத்தியோகத்திற்காக இந்தி தெரிந்திருக்கவேண்டிய அவ சியமும் கிடையாது. எதிர்காலத் தில் மாகாண நிர்வாகம் பூராவும் மிழிலேயேநடக்கப்போகிறது. எந்த திதத்தில் பார்த்தாலும், மறைமுக மாகக்கூட இந்தி கட்டாய பாடமா வதற்குக் காரணம் கிடையாது.

இதைக் கல்விமந்திரி நன்குஉணர்ந் திருக்கிறார் என்பதற்கு அவர் முத லில் போட்டிருந்த உத்தரவே அத் தாட்சி. முதல்உத்தரவின்படி, இரண் டாவது பாஷையை எடுத்துக்கொள் வதும் எடுத்துக்கொள்ளாததும் மாணவர்களின் இஷ்டத்தைப் பொறுத்தது. இஷ்டமில்லாவிட் டால், இரண்டாவது பாஷைத் தொகுதியில் எதையுமே எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடலாம்.

முதலில் செய்யப்பட்ட இந்தஏற் பாடு பொதுஜன அபிப்பிராயத்தை ஒட்டி இருந்தது. அவர் இதைஏதற் காக மாற்றவேண்டும்? யாருடைய தூண்டுதல்பேரில் முதல்உத்தரவைக் கைவிட்டார்?

இந்தக்கேள்விகளுக்கு அவர்பதில் அளிக்காவிட்டாலுங்கூட, பதிலை யூகித்தறிவது கடினமல்ல. காங்கிர சுக்குள்ளேயே சில அவசர குடுக் கைகள் துள்ளிக் குதித்திருக்கலாம். கல்வி மந்திரி நிதானமாக நடந்து கொள்கிறார் என்று குற்றஞ்சாட்டி யிருக்கலாம். குறை கூறும் 'உற்சா கிகளை' திருப்திப்படுத்துவதற்காக பழைய உத்தரவை மாற்றியிருக்கி றார் என்றே கருதுகிறோம். கல்வி மந்திரியின் சங்கடத்தை நாம் உண ராமல் இல்லை.

இந்த நிலைமையில் கல்வி மந்திரி என்ன செய்தாக வேண்டுமென்பதில் சந்தேகமிருக்க முடியாது. கொஞ் சங்கூடக் கூசாமல் இரண்டாவது உத்தரவைக் கிழித்தெறியவேண்டும். அதற்குப்பிறகு, முதல் உத்தரவை யாவது அமுலுக்குக்கொண்டு வர லாம்; அல்லது 4-வது பாரத்திலி ருந்தா இந்தி கற்றுக்கொடுக்கவாவது ஏற்பாடு செய்யலாம்.

பொதுஜன அபிப்பிராயத்தை மதித்துப்போக்கைமாற்றிக்கொள்ளு வதில் தவறு ஒன்றுமில்லை. ராஜாஜி யைப்போன்ற பிரபல தலைவர்கள் அனேக சந்தர்ப்பங்களில் இப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்ப தையும் எடுத்துக்காட்ட விரும்புகி றோம். போதுமக்கள் அபிப்பிரா யத்தை அனுசரித்து கல்வி மந்திரி, தன் போக்கை மாற்றிக்கோள்வார் என்று நம்புகிறோம்."

நாம் இதனை இங்கு வெளியிடு வதற்குக் காரணம், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை இப்பத்திரிகை ஆதரிக் கிற தென்பதற்காக மட்டும் அல்ல. சர்க்காரின் தடுமாற்றம், அந்தச்சர்க் காரை ஆதரிக்கும் பத்திரிகைகளுக் கும் இயல்பாகவேஏற்பட்டு விடுகிற தென்பதைப் பொதுமக்கள் அறிந்து உண்மையை உணரவேண்டுமென் பதற்காகவே இதனை இங்கு வெளி யிடுகிறோம். 6—8—48-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நியாயமான தென்று எழுதிய "தினத்தந்தி", இந்தி எதிர்ப்பு மறியல் துவக்கப் பட்ட நாளாகிய 10—8—48-ல்— நாலு நாட்களுக்குள் இந்தி எதிர்ப் புக் கிளர்ச்சி அவசியமில்லையென் றும், இந்தி எதிர்ப்புக்காரர்கள், காங்கிரஸ் சர்க்காரை எதிர்ப்பதற்கா கவே இந்தச் சூழ்ச்சியைச் செய்கி றார்கள் என்று சந்தேகப்படுவதாக வும் ஒரு தலையங்கம் எழுதிவிட்டது. 10—8—48-ல் எழுதிய தலையங்கத் திலும் சர்க்காரின் கட்டாய இந்தித் திட்டத்தைக் கண்டித்து எழுதின போதிலும், நாலு நாட்களுக்குள் கண்டனங்கள் வேறு வடிவம் பெற்று விட்டன. கண்டனங்கள் கனிவுரை களாக மாறிச், சர்க்காரும் இந்தி எதிர்ப்பாளர்களும் சேசமனப்பான் மையில் ஒருமுடிவுக்குவரலாம்—அது மிகவும் சுலபம் என்றும் கூறுகின் றது. இந்த அளவோடு 'தினத்தந்தி' நின்றிருந்தால், நாமும் இதைப்பற்றி இவ்வளவு தொலைவு எழுதவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிராது. ஆனால், சர்க்காரின் இந்தித் திட்டத்தைக் கண்டிக்க 6—8—48-ல் கையாண்ட வாசகங்களையும் 10—8—48-ல் கையாண்ட வாசகங்களையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, 6—8—48-ல் 'தினத்தந்தி'

> "யாருடைய தூண்டுதலின் பேரில் முதல்உத்தரவைக் கைவிட் டார்"

என்று கல்வியமைச்சரைக் கேட்ட கேள்வியையே நாமும்,

> யாருடைய தூண்டுதலின் பேரில், "இந்தி எதிர்ப்பைச் சாக் காக வைத்துக்கொண்டு சர்க் காரை எதிர்க்க இவர்கள் கிளம்பு கிறார்கள்" என்பதாக ஏன் எழுத வேண்டுமென்று

'தினத்தந்தி'யைக் கேட்கவேண்டி யிருக்கிறது. 10—8—48-ல் 'தினத் தந்தி'யில் காணப்படும் சில வாசகங் களையும் இங்கு தருகிறோம்:—

> "ஈ. வே. ரா. பிரதமரைச் சந் தித்தும் கூட எந்தவிதமான முடி வும் ஏற்படவில்லை."

> "இந்தி எதிர்ப்புப் போராட் டம் தவிர்க்க முடியாததாகிவிட் டது என்று இந்தி எதிர்ப்பாளர் கள் கூறுகிறார்கள்."

> "இப்பொழுது அதிகாரத்தில் இருப்பது பொதுஜன சம்மதத் தைப் பெற்றுப் பதவிக்குவந்தசர்க் கார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால், போராட் டத்தைத் தவிர்ப்பது சாத்திய மென்ற முடிவுக்குத் தான் வர முடியும்."

இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒன்றை நினைவுறுத்தி, மேலும் 'தினத்தந்தி' கூறும் கருத்துக்களை வெளியிடுகிறோம். அதாவது, 6—8—48-ல்

> "பொதுஜன அபிப்பிராயத்தை மதித்து, போக்கை மாற்றிக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை."

என்று எழுதிய 'தினத்தந்தி'யே, 10—8—48-ல் "இப்பொழுது அதி காரத்தில் இருப்பது பொதுஜன சம் மதத்தைப் பெற்றுப் பதவிக்கு வந்த சர்க்கார், எனவே, சர்க்கார் சொல்லுகிறபடி பொதுமக்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 15—8—48 [ஞாயிறு

# ஏன் எதிர்க்கிறோம்

✻

இந்திஎதிர்ப்புப்போர், 10-8-48ல் தொடங்கிநடைபெறுகின்றது. போர் தொடங்கிய பின்னர், போர் ஏன் தொடங்கப்பட்டது என்பதற்குக் காரணம் கூறத்தேவையில்லை போர் தொடங்குவதற்கு முன்னரே, போர் தொடக்கப்படாமல் இருக்கவேண்டுமானால், இன்னின்ன காரியங்களைச் சர்க்கார் செய்யவேண்டுமென்று, பல ஆயிரக்கணக்கான மக்களின் ஆதரவைப்பெற்று நடத்தப்பட்ட பல பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், மாகாண மாநாடு வாயிலாகவும், பல தமிழ்ப்பேராசிரியர்கள், தலைவர்கள், மாணவர்கள், முன்னிலையில் தீர்மானங்கள் நிறைவேற்றிச் சர்க்காரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், சர்க்கார் எதற்கும் இணங்கி வரவில்லை. எனவே, இனிப் போராட்டத்தைத் தொடங்குவதைத் தவிர, வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்து களம் புகுந்த பின்னரும், போராட்டத்துக்குரிய காரணங்களை விளக்கிக்கொண்டிருப்பது வீண் வேலையாகும். என்றபோதிலும், இது குறித்துச், சர்க்காரும் சில பத்திரிகைகளும், முன்னுக்குப்பின் முரணாகத்தங்கள் கருத்துக்களை வெளியிட்டு, ஏற்கனவே, பொதுமக்கள் கொண்டிருந்த கருத்துக்களை மாற்றி அவர்களுக்குச் சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கும் முறையில், மனச்சாட்சிக்கு மாறாகவும், நீதிக்குப் புறம்பாகவும், நேர்மையைக்கைவிட்டு, நெறிதவறிக்காரியங்களைச் செய்ய முற்பட்டுவிட்டதாலேயே, நாம்நம்முடையநோக்கத்தை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறி விளக்கிப்,பொதுமக்களுக்குஏற்படும் சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் போக்கி, நம்முடைய முடிவுசரியென்பதைஉறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால், நாம்பொதுமக்களின்நலன்ஒன்றைமட்டுமேகுறிக்கோளாகக்கொண்டு பணிபுரிகின்றோமாதலால், அவர்களைத்தப்பான வழிக்கு இழுத்துச் செல்பவர்களின் தவறான போக்குகளைக் கண்டிக்கவும், அவற்றைப்பொதுமக்களுக்கு எடுத்துக் கூறவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை மாகாணத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் இந்திமொழியை கட்டாயபாடமாக்க வேண்டுமென்று விரும்பிய சர்க்கார் முதலில் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அதாவது,

> "சென்னை மாகாணத்தில், தமிழ்நாடு தவிர, ஆந்திர, கேரள, கன்னடப்பகுதிகளில் இந்தி கட்டாய பாடம்; தமிழ் நாட்டில் விருப்ப பாடம்"

இந்த உத்தரவு, பத்து ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் நடைபெற்ற கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் அதன் வெற்றியையும் சர்க்கார் உணர்ந்து, இனியும் ஒரு போராட்டத்தை உண்டாக்கக்கூடாதென்று எண்ணியே இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளனர் என்று எண்ணினோம். என்றாலும் இந்தி நுழைவு தமிழ்மொழிக்கும், தமிழர் கலாச்சாரத்துக்கும் ஊறு உண்டாக்கும் என்பதை நாம் மேலே உள்ள உத்தரவைக் கண்டபின்னரும் வலியுறுத்திக்கூறியே வந்தோம்.

ஆனால், இந்த உத்தரவு வெளிவந்ததும் சில பத்திரிகைகள் சர்க்காரை மிரட்டி இந்த உத்தரவை மாற்றும் நிலைமையை உண்டாக்கிவிட்டன. தமிழ்நாட்டில்மட்டும் இந்தியை ஏன் விருப்ப பாடமாக்க வேண்டும் என்று அப்பத்திரிகைகள் கேட்டன. ஆனால் சர்க்கார் அதற்குச் சமாதானம் கூறவில்லை. சமாதானம் கூறுவதற்குச் சர்க்காருக்குத் துணிவும் நேர்மையும் உண்டாகாததற்குக் காரணம் என்ன வென்றால், மந்திரிப் பதவியே ஒரு சில பத்திரிகைகளின் பக்க பலத்தினால் தான் நிலைத்திருக்கிறது — நிலைத்திருக்க முடியும் என்ற தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பதேயாகும். இந்தத் தப்புக்கணக்குத்தவறான — தேவையற்ற காரியங்களைப் பொதுமக்களின் விருப்பத்துக்கு மாறாக, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமலேயே செய்யும்படி தூண்டிவிடுகின்றது. எனவேதான் தமிழ் நாட்டில் இந்தியை விருப்ப பாடமாக்கியதைக்கண்டதும், சில பத்திரிகைகள் அந்த ஏற்பாட்டைக் கண்டித்துத் தமிழ்நாட்டிலும் இந்தி கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தின. [illegible] மண்டியிட்ட சர்க்கார் உடனே தன் உத்தரவை மாற்றிக்கொண்டது.

> "தமிழ் நாட்டிலும் இந்தி கட்டாய பாடம்தான்"

என்று அந்த உத்தரவு கூறிற்று.

இந்த உத்தரவு பிறந்தவுடனே தான் தமிழ்மக்கள் தங்கள் எதிர்ப்பின் முழுப்பலத்தையும் சர்க்காருக்கு உணர்த்தினர். ஒருநாள் இரண்டுநாளல்ல — ஒரு கூட்டம் இரண்டு கூட்டமல்ல. பலநாட்கள்—பலகூட்டங்கள் — பல மாநாடுகள் — மாகாண மாநாடுகள் கூட்டி, மாணவர்களும் பொதுமக்களும் ஒரு முடிவுக்கு வந்து, தமிழ்நாட்டுக்கு இந்தி வேண்டாம் என்பதைத் தெளிவான தீர்மானங்கள் மூலம் தெரிவித்தனர் —சர்க்கார் செவி சாய்க்கவில்லை.

ஒருநாள் கண்டனத்துக்கேமண்டியிட்டுப்பணிந்து தங்கள் உத்தரவை மாற்றிக்கொண்ட சர்க்கார், மாதக் கணக்கில் மாநாடுகள் கூட்டி மக்களின் முழு ஆதரவையும் பெற்றுத் தெரிவித்த வேண்டுகோளைத் தினையளவும் மதிக்கவில்லை. மதிக்காதது மட்டுமல்ல; யார் கண்டனங்களை வீசிச்சர்க்காரை, மண்டியிடும்படி செய்தனரோ அவர்கள் மனம் குளிரும் முறையில் காரியங்களையும்செய்தனர். இந்திமொழியை மட்டுமல்ல, சமஸ்கிருதம், அரபி, முதலான மொழிகளையும் கட்டாய பாடமாக்கியிருக்கிறோம் — கவலை வேண்டாம் என்றனர்.

இந்தநிலை ஏற்பட்டவுடனே, தமிழ் மக்கள் கட்டாய இந்தித்திட்டத்தை ஒழித்துத் தீருவதென்ற முடிவுக்கு வந்தனர். ஜனநாயகம் என்றால் என்ன என்பதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ள ஒரு சர்க்கார், தங்களைச் ஜனநாயக சர்க்கார் என்று வெட்கமின்றிச் சொல்லிக் கொள்கிறதே என்பதைப் பொதுமக்கள் உணரும்படி செய்யவே இந்தி எதிர்ப்பு இயக்கம் தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில் நடைபெற்ற ஒவ்வொரு இந்தி எதிர்ப்புக் கூட்டங்களும் மாநாடுகளும், தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டாம் என்பதனை ஜனநாயக முறையில் உணர்த்தின.

மக்களில் பெரும்பாலோர் கட்டாய இந்தித் திட்டத்தை விரும்பவில்லை என்பதைத் தெரிந்தவுடனே, சர்க்கார் ஒரு புதுமுறையைக்கையாளத்தொடங்கிற்று. அதாவது,

"இந்தி கட்டாயபாடமாக்கப் படவில்லை"

என்று தலைப்புடன் அறிக்கைகள் வெளியிடத் தொடங்கிற்று. அந்த அறிக்கைகளில், இந்தி கட்டாயபாடமாக்கப்படவில்லை என்று கூறியதோடு மட்டும் சர்க்கார் நின்றுவிடவில்லை.

"சிலர் சர்க்காரின் திட்டத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் இந்தி கட்டாயபாடமாக்கப்பட்டிருக்கிறதென்று தப்பான பொருள் கொண்டு விட்டனர்;"

என்று மேலும் தங்கள் தவறை மறைக்க முயன்றனர்.

"இந்தியை இரண்டாவது மொழிக்குழுவில் சேர்த்திருக்கிறோம். இரண்டாவது மொழிக் குழுவில் இந்தி—சமஸ்கிருதம்—அரபி—கன்னடம் மலையாளம்—தெலுங்கு முதலான பலமொழிகள் இருக்கின்றன; மாணவர்கள் இவைகளில் ஏதாவதொரு ஒரு மொழியை எடுத்துப் படிக்கலாம்; குறிப்பிட்ட ஒருமொழிதான் படிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை; எனவே இந்தி மொழி கட்டாய பாடமாக்கப்படவில்லை"

என்று அறிக்கைகளை ஒன்றின்பின் ஒன்றாக வெளியிடத் தொடங்கினர். சர்க்காரின் இந்த அறிக்கைகளைப் பார்த்தவுடனே, "இந்திமொழிதான் கட்டாயபாடமாக்கப் படவில்லையே! மாணவர்கள் விரும்பினால் படிக்கலாம்; விரும்பவில்லையென்றால் விட்டு விடலாம் என்றுதானே சர்க்கார் அறிக்கை கூறுகின்றது; அப்படியிருக்க ஏன் எதிர்க்கவேண்டும்" என்றுகூடப் பலர் எண்ணக்கூடிய முறையில் சர்க்கார்தங்கள் 'திறமை'யைப் பயன்படுத்தி வேலை செய்தனர். விளக்கமற்றவர்களுக்கு இவ்வறிக்கை சரியானதே என்று தான் தோன்றும். ஆனால் இவ்வறிக்கையில் அடங்கியிருக்கும் உண்மையென்ன? இந்தி எதிர்ப்பைத் தவறான கிளர்ச்சி என்று எண்ணுபவர்கள் இவ்வறிக்கையில் அடங்கியிருக்கும் உண்மையை அறியவேண்டும்.

"இரண்டாவது மொழிக்குழுவில் சேர்க்கப்பட்டிருக்கும் மொழிகளில் மாணவன் எதைக் கற்க விரும்பினாலும் அதைக் கட்டாயபாடமாக எடுத்துக்கற்க வேண்டும். கட்டாயமாகக் கற்பதுமட்டுமல்ல, பரீட்சையிலும் அந்த மொழியில் தேர்ச்சிபெற வேண்டும். எல்லாப் பாடங்களிலும் மாணவன் தேர்ச்சி பெற்றும், இரண்டாவது மொழிகளில் ஒன்றில் தேர்ச்சி பெறாவிட்டால் அவன் மேல்வகுப்புக்குப் போக முடியாது."

என்று அவ்வறிக்கையில் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்கமும், இந்திமொழி கட்டாயமாக்கப்படவில்லை என்ற எண்ணத்தைத்தான் சிலருக்கு உண்டாக்கும். "ஏதாவதொரு மொழியை எடுத்துக் கொண்டால், எடுத்துக் கொண்ட மொழியைத்தானே மாணவன் கட்டாயமாகக் கற்கவேண்டுமென்றுகூறப்பட்டிருக்கிறது; எனவே இந்திமொழியைக் கற்க விரும்பவில்லையென்றால், மாணவன் தான் விரும்புகின்ற வேறொரு மொழியை எடுத்துப்படிக்கலாமே! இதில் இந்தி கட்டாயம் என்பது எங்கே இருக்கிறது?" என்றும் சிலர் எண்ணக் கூடும்.

இந்திமொழி பற்றிய சர்க்காரின் அறிக்கையை மட்டும் பார்ப்பதோடு நின்றுவிடாமல், கல்வி சம்பந்தமாகச் சர்க்கார் வெளியிட்டிருக்கும் வேறு அறிக்கைகளையும் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் முழு உண்மையும் புலப்படும். இந்திமொழியைச் சர்க்கார் கட்டாய பாடமாக்கவில்லை என்று எண்ணுபவர்கள், சர்க்காரிடம் கீழ்க்குறிப்பிடும் கேள்விகளைக் கேட்டால் சர்க்கார் என்ன விடைதரும் என்பதைஇங்கு விளக்குகிறோம்.

பொதுமக்கள்:- இரண்டாவது மொழிக் குழுவில் உள்ள எந்த மொழியை வேண்டுமானாலும் மாணவன் தன் விருப்பம் போல் எடுத்துப் படித்துக் கொள்ளலாம் என்பது உண்மை தானா.

சர்க்கார்:- உண்மை. சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

பொ. ம:- தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் தெலுங்கு மொழியைப் படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்

பொ. ம:- தெலுங்கு படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா?

சர்க்கார்:- இல்லை

பொ. ம:- மலையாள மொழியைப் படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்.

பொ. ம:- இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

சர்க்கார்:- இல்லை.

பொ. ம:- கன்னடம் படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்.

பொ. ம:- என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

சர்க்கார்:- ஒன்றும் இல்லை

பொ. ம:- அரபிமொழி படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்.

பொ. ம:- ஏற்பாடு உண்டா?

சர்க்கார்:- இல்லை.

பொ. ம:- சமஸ்கிருதம் படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்.

பொ. ம:- என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது?

சர்க்கார்:- ஒன்றும் இல்லை.

பொ. ம:- இந்தி படிக்கலாமா?

சர்க்கார்:- படிக்கலாம்.

பொ. ம: இந்தி படிப்பதற்கு எந்த விதமானவசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது?

சர்க்கார்:- இந்தி படிப்பதற்கு எல்லாவிதமான வசதிகளும் ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம்.

பொ. ம:- இந்தி படிப்பதற்குமட்டும் எல்லாவிதமான வசதிகளும்செய்து கொடுத்துவிட்டு, மற்ற மொழிகளுக்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யாமல் இருப்பது முறையா?

சர்க்கார்:- இந்தி, இந்நாட்டுக்குப் பொதுமொழியாக இருக்கப் போவதால் அதற்கு மட்டும் எல்லாவசதிகளும் செய்யப்பட்டிருக்கிறது.

பொ. ம:- அப்படியானால், இந்தி கற்பதற்கு மட்டும் எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுத்துவிட்டு, எந்தவிதமான வசதிகளும் செய்யப்படாத மொழிகளை மாணவர்கள் விரும்பினால் கற்றுக்

கொள்ளலாம் என்று கூறுவதன் பொருள் என்ன?

சர்க்கார்:- மற்ற மொழிகளைக் கற்பதற்கு வசதி செய்து தரப்பணமில்லை.

பொ. ம:- இந்திமொழி கற்பதற்கு மட்டும் பணம் இருக்கிறதா?

சர்க்கார்:- ஏராளமாக இருக்கிறது. கல்விக்காகப் பத்துக்கோடி ரூபா ஒதுக்கிவைத்திருப்பதே, இந்தியை எல்லோரும் கற்க வேண்டுமென்பதற்காகத்தான்.

பொ. ம:- நாங்கள் விரும்பாத மொழிக்குப் பணஉதவி செய்வதும், மற்ற ஏற்பாடுகளைச் செய்வதும் முறையா?

சர்க்கார்:- இப்படியெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது.

பொ. ம:- அப்படியானல், யார் கேட்பது?

சர்க்கார்:- யாருமேகேட்கக்கூடாது. எது நல்லதென்று நாங்கள் நினைக்கிறோமோ அதைநாங்கள் செய்கிறோம்.

பொ. ம:- நல்லதென்று நீங்கள் நினைப்பது, யாருக்கு? உங்களுக்கா? பொதுமக்களுக்கா?

சர்க்கார்:- பொதுமக்களுக்குத்தான்.

பொ. ம:- நீங்கள் செய்கின்ற காரியங்கள் எல்லாம் பொதுமக்களின் நன்மைக்கென்றால், அவற்றைப் பொதுமக்களிடம் கேட்டுச் செய்யவேண்டாமா?

சர்க்கார்:- வேண்டியதில்லை. எங்களுக்கு எல்லாம் தெரியும்.

பொ. ம:- இப்படிச் செய்வதுதான் ஜனநாயகமா?

சர்க்கார்:- இதுதான் எங்களுடைய ஜனநாயகம்.

நாம் மேலே எழுதியிருக்கும் உரையாடல், இந்தித் திட்டம் பற்றிய சர்க்காரின் அறிக்கைகளுக்குத் தரப்படும் உண்மை விளக்கமாகும். இதனை உண்மையென்று ஒப்புக்கொள்ள மறுப்போர், மீண்டும் சர்க்காரின் அறிக்கைகளை ஒருமுறைக்கு இரண்டுமுறை படித்துப்பார்க்க வேண்டுகிறோம். படித்துப் பார்க்கும் அளவுக்குப் பொறுமையைக்காட்ட முடியாதவர்கள், பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் மாணவர்களிடமாவது, கேட்டால் அவர்கள் உண்மையைக் கூறுவார்கள். அப்பொழுது தெரியும், சர்க்கார் கூறும் இரண்டாவது மொழிக் குழுவில் இந்தி ஒன்றுதான் கட்டாயம் படிக்கவேண்டிய மொழி என்ற உண்மை. இந்த உண்மை தெரிந்துவிட்டால், இந்தி எதிர்ப்பு நியாயமான கிளர்ச்சி என்பது புலப்படும். இதுமட்டுமல்ல, இந்திமொழியை எப்படியாவது தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக்குவதற்குச் சர்க்கார் செய்யும் சூழ்ச்சிதான் இது என்பதும் நன்கு விளங்கிவிடும்.

இந்திமொழியைப் படிக்கவிருப்பமில்லை யென்றால், வேறொரு மொழியைப் படிப்பது தானே என்று சர்க்கார் கூறுகின்றார்களே, வேறுமொழி படிப்பதற்குத் தான் சர்க்கார் எந்த விதமான ஏற்பாடும் செய்யவில்லையே என்பதைக் கூடவா பொதுமக்கள் இனியும் உணராமல் இருக்கமுடியும்? எனவே, இந்தி எதிர்ப்பு நேரடி நடவடிக்கை ஏன் எடுத்துக்கொள்ளப் பட்டதென்பதை இனியாவது அதனைத் தவறெனக் கருதுவோர் உணர முடியுமென்று நம்புகிறோம்.

## வேண்டுகோள்

சென்னை சர்க்கார் தமிழ்மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும், தமிழ் மக்களின் வேண்டுகோள்களைப் புறக்கணித்தும் கட்டாய இந்தித் திட்டத்தைத் தமிழ்நாட்டிலுள்ளபள்ளிக் கூடங்களில் புகுத்தியதை எதிர்த்து 10—8—48-ல் இருந்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

எனவே, தமிழரசுக் கழகம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தனிப்பட்ட முறையில் நடத்தும் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறதென்று அதன் தலைவர் தோழர் மா. போ சிவஞானம் அவர்கள் வெளியிட்ட அறிக்கையை நாம் பாராட்டிவரவேற்பதோடு,போராட்டத்தை விரைவில் தொடங்குவார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்.

போர்முனை வேறாக இருந்தாலும் இத்துறையில், குறிக்கோள் திராவிடர்கழகத்துக்கும் தமிழரசுக் கழகத்துக்கும் ஒன்றாகவே இருப்பதால் இப்போராட்டத்தை யாரார் எந்தெந்த முறையில் நடத்தினாலும் வெற்றி தமிழ்மொழிக்கும் தமிழர் கலாச்சாரத்துக்குமேயாகும்.

இந்தப் போராட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணமோ அல்லது வேண்டுமென்றே சர்க்காரை எதிர்க்கும் குறுகிய எண்ணமோ திராவிடர் கழகத்துக்குக் கிடையாதென்பதை நாம் பலதடவை தெரிவித்திருக்கிறோம். ஆகையால் இப்போராட்டம் வெற்றி பெறுவதற்கு யாரார் எந்தெந்த வகையில் பணி புரிந்தாலும் அவையெல்லாம் தமிழ்மொழிக்காகச் செய்யப்படும் தொண்டென்றே கருதப்படும்.

எனவே, ஏற்கனவே முடிவுசெய்தபடி தமிழரசுக்கழகம் தன்னுடைய போராட்டத்தைத் துவக்குவதற்குரிய ஏற்பாடுகளைத் தோழர் மா. போ. சி அவர்கள் முன்வந்து தம்முடைய கடமையைச் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

---

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்றதுமான ஆங்கிலமே இருந்துவிட்டுப் போகட்டும் என்று.

ஏனெனில் பொதுமொழியொன்று இல்லாவிட்டால் தொடர்பு அற்றுப்போகும் என்று நினைப்பது தவறு. பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் — ருஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும்-பொதுமொழி ஒன்றும் கிடையாது. அதனால் அவற்றுள் தொடர்பு அற்றுவிட்டதா?

பொதுமொழி இல்லாதிருப்பதால் ஒவ்வொரு ருஷியனுடனும் நேரடியான தொடர்பு கொள்வது அசாத்தியமாயிருக்கலாம். ஆனால் இந்தத் தொடர்பு அவசியமாயிருக்கிறதா? அதேபோல் ஒவ்வொரு வடநாட்டானுடனும், வடநாட்டார் அவ்வளவு பேரும் ஹிந்தி பேசுகிறார்கள் என்று வைத்துக்கொண்டால் கூட, தொடர்பு கொள்ளத்தேவையிருக்கிறதா? இல்லை.

எனவே இந்த நீண்ட காலத் திட்டத்தின் கீழ் பொதுமொழியின் தேவையே அறவே இல்லாமல் போய்விடுகிறது. எனவே ஆங்கிலத்தின் தேவையும் அந்த அளவில் குறைந்து இன்மையை நெருங்கிவிடுகிறது.”

என்று எழுதியிருக்கிறது. காங்கிரஸ் இதழான ‘சிவாஜி’ எழுதியிருக்கும் இக்கருத்துக்களை ஊன்றிக் கவனிப்போருக்கு, இந்திக் கட்டாயத் திட்டத்தை எதிர்த்து நாம் நடத்தும் போராட்டம், மந்திரி பக்தவத்சலம் அவர்கள் கூறுவது போல் ‘அரசியல் வாண வேடிக்கை’ அல்லவென்பதும், உண்மையாகவே

(8-ம் பக்கம் பார்க்க)

# போலிச் சமாதானம்

—✲—

தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயபாடமாக்குவதன் அடிப்படைக் காரணத்தை முதலமைச்சர் வெளிப்படையாகக் கூறிவிட்டார். அதாவது,

> "இந்தி படித்திருந்தால்தான் மத்திய சர்க்காரில் இனி வேலை கிடைக்கும்."

என்பது அவருடைய காரணங்களில் ஒன்று. இந்தக்காரணம் படிப்பின் அடிப்படைக்கே முற்றிலும் மாறானது. இந்நாட்டிலுள்ளவர்களின் படிப்பு முறை, ஏதாவதொரு வேலை (உத்தியோகம்) கிடைக்கும் என்ற அடிப்படையின்மீது கற்கப்படுவதால், பலர் படிப்பினால் ஏற்படும் சரியான பயனைப் பெறமுடியாதவர்களாகி விடுகிறார்கள் என்று முதலமைச்சரே பல தடவை கூறியிருக்கிறார். முதலமைச்சர் மட்டுமல்ல, உலகிலுள்ள அறிஞர்கள் எல்லாருமே, படிப்பின் பயன், வெறும் பதவி பிடிப்பதற்காக இருக்கக்கூடாதென்றும், படிப்பு, தனக்கும் பிறர்க்கும் பயன்படக்கூடிய அறிவைப் பெறக்கூடியதாக அமையவேண்டுமென்றும் கூறுகின்றனர். ஆனால், முதலமைச்சர், 'இந்தி படித்தால் வேலை கிடைக்கும்' என்று கூறுகிறார்.

எப்படியாவது இந்திமொழியைத் தமிழ்மக்கள் படித்தாக வேண்டுமென்ற திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டுவந்துவிடவேண்டுமென்பதற்காகவேதான முதலமைச்சர் இவ்வாறு கூறுகிறார் என்று நினைக்கிறோம். இல்லாவிட்டால், கல்வித்துறையின் கடைசிப்படியிலே போய் நின்றுகொண்டு, "இந்தி படித்தால் வேலை கிடைக்கும், எனவே இந்தி படியுங்கள்" என்று ஒரு மாகாணத்தை நடாத்தும் பெரிய பொறுப்பை ஏற்றுநிற்கும் முதலமைச்சர் கூறுவாரா? கல்வியையும் அதனால் பெறப்படும் உண்மையான அறிவையும் பெறாத மக்களையே பெருவாரியாகக்கொண்ட ஒருநாட்டில்தான் இவ்விதம் பேசி மக்களை ஏமாற்ற முடியுமேயன்றிக், கல்வியறிவின் உண்மைப்பயனை உணர்ந்த எந்த நாட்டிலும் இத்தகைய பொருளற்ற பேச்சுக்களால் மக்களை ஏமாற்றித் தங்கள் சுயநல வேட்கையைத் தீர்த்துக்கொள்ள முடியாது.

இனி, 'இந்தி கற்றால்தான் மத்திய சர்க்காரில் வேலை கிடைக்கும்' என்று முதலமைச்சர் கூறியதற்கு நாம் இன்னும் விரிவாக விடை எழுதி, அவருடைய தவறை எடுத்துக் காட்ட முன்வந்தால், "எதற்கெடுத்தாலும் இவர்கள் சர்க்காரைக்குறை கூறுவதையே தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள்" என்று சிலர்பொறுப்பற்றும்—பொறுமையை இழந்தும்—உண்மையை மறந்தும் சாட்டப்படும் குற்றச்சாட்டுக்கு நாம் ஆளாகாமல், மகனை தந்தையின் குற்றத்தை எடுத்துக்காட்டித் திருத்துவது போல், காங்கிரஸ்காரரே காங்கிரஸ் சர்க்காரின் குற்றத்தை எடுத்துக்காட்டிச், சர்க்கார் செய்யும் தவறைத் திருத்தும்படி செய்வதே இன்றைய நிலையில் பொருத்தமாக இருக்கிறது. எனவே, இந்தி படித்தால்தான் மத்திய சர்க்காரில் வேலை கிடைக்கும என்ற முதலமைச்சரின் கூற்றுக்குத் திருச்சியிலிருந்து வெளிவரும் காங்கிரஸ் இதழான 'சிவாஜி' 8—8—48ல் தக்கவிடையளித்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் நம்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள், அவர்களுக்கு இயல்பாகவுள்ள பொறுமையினால் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளே என்பதை அனைவரும் உணர இது பெரிதும் பயன்படும் என்று கருதிச் 'சிவாஜி' இதழில், "பொது மொழி யாருக்குத் தேவை?" என்ற தலைப்பில் வந்த குறிப்புகளில் சிலவற்றை இங்கு தருகிறோம்:—

"மாகாண எல்லைக்கு அப்பாற்பட்ட அனைத்திந்திய அரசாங்க அலுவலகங்களில் வேலைக்குப் போக விரும்புவோருக்கும், வர்த்தக வகுப்பினருக்கும, உல்லாச யாத்ரீகர்களுக்குமே இந்தப் பொதுமொழித்தேவை ஏற்படுகிறது. இத்தகைய தொடர்பை விரும்புவோர் அல்லது தொடர்பைப் பெறக்கூடியவர் 100-க்குப் பத்துபேர் தான் இருக்கவாம். 90 சதவிகிதமுள்ள தொழிலாளிகளும், விவசாயிகளும் அந்தந்த நாட்டிலேயே அடிப்படை உற்பத்தி, உணவுப் பெருக்கம் இவற்றில் ஈடுபட்டிருப்பவர்களே யல்லவா?

பொதுமொழி ஒவ்வொரு மாணவனும் பயின்றாக வேண்டுமென்ற கவலை ஏற்படுவதேனென்றால் பாடசாலையில் படித்துப்பட்டம் பெறுவதன் லட்சியம் அரசாங்க உத்யோகம் பெறுவதே என்ற தத்துவம் தோன்றியிருப்பதுதான். உண்மையிலே படித்துப் பட்டம் பெறுவோர் அனைவரும் உத்யோகங்களுக்குப் போய் விடுவதில்லையென்பதையும் இனியாவது நாம் உணரவேண்டாமா?

ஆனால் இன்று பெரும்பாலான விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் கலாசாலைப்படிப்புக் கிடைப்பதில்லை. கல்வி கிடைக்கும் ஒருசிலர் இயற்கையாக உத்யோகங்களை நாடுவது இயல்பு. இதனாலேயே இனியும் படிப்பின் பயன் உத்யோகம் தான் என்ற நிலை மாறப்போவதில்லை என்று கருதுவது போலச் செயல் புரியக் கூடாது.

கல்விவசதி ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைக்குமென்ற நிச்சயமில்லாத நாடுகளில்தான் படிப்பின்பயன் உத்யோகம்என்றலட்சியம் நடைமுறையில் தோன்றலாம். இனியும் இந்த நாட்டில் படிப்பின்பயன் உத்யோகம்தான் என்றால் சராசரி அனைவருக்கும் கல்வி கிடைக்காதென்றும், உத்யோகங்களுக்கு செல்லக்கூடிய சிறுபான்மையோருக்கு மட்டுமே கல்விச்சாலைகள் பயன்படுமென்றும் ஆகிவிடும்.

இன்றைய நிலையில் இன்னும் முந்தைய நாள் போலவே கல்வி இன்னும் சிலருக்குமட்டுமேதான் கிடைக்கிறது. இதனால்தான் மாணவர்களை வருத்தும் பொது மொழித் தேவை தீரவில்லை. இந்த நடைமுறை உண்மையை மனதில் கொண்டே நாம் கூறுகிறோம், சரியான திட்டங்கள் அமுலுக்கு வந்து, கல்வி அனைவருக்கும் கிடைத்து வாழ்வுக்குக் கல்வி சகல துறைகளிலும் பயன்தரும் நாள்வரை இடைக்காலத்தில் இன்றியமையாத பொதுமொழியாக ஒன்று தேவையாக இருப்பதால் அது, ஏற்கெனவே இத்தனை காலம் நம்முடன் பழகிவிட்டதும், அகில உலகத் தொடர்பு...

6-ம் பக்கம்...

## நாலு நாட்களுக்குள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

கள் கேட்கவேண்டும் என்ற பொருளில் எழுதியிருக்கிறது. 6-8-48-ல் பொதுஜன அபிப்பிராயத்தை சர்க்கார் மதிக்கவேண்டுமென்றும், 10—8—48-ல் சர்க்கார் அபிப்பிராயத்தை பொதுமக்கள் மதித்து அதன்படி நடக்கவேண்டுமென்றும் எழுதியிருக்கிறது. இவ்விரண்டில் எது ஜனநாயக முறை என்பது விளங்கவில்லை. முன்னதா? பின்னதா? பொதுமக்களின் அபிப்பிராயத்தை சர்க்கார் மதிப்பது ஜனநாயகமா? அல்லது சர்க்கார் அபிப்பிராயத்தைப் பொதுமக்கள் மதிக்க வேண்டுமா என்பதை முதலில் 'தினத்தந்தி' புரிந்துகொண்டு, இந்தத் துறையில் இறங்கியிருந்தால், அது பொதுமக்களின் நன்மைக்காகவே தன்னுடைய கருத்துக்களை வெளியிடுகிறதென்று கருத முடியும். ஆனால், 'தினத்தந்தி'யின் ஜனநாயக முறை, பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டுவதுபோல், ஒரு புறம் இந்தியை ஆதரிப்பதுபோலவும், இன்னொரு புறம் இந்தி எதிர்ப்பை எதிர்ப்பது போலவும் இரண்டும் கெட்ட முறையில் 'ஜனநாயக'த்துக்கு விளக்கம் கூறுகிறது.

"இந்தி கட்டாயபாடமாகக் கூடாது என்பதில் இவர்களுக்கு உண்மையான சிரத்தை இருக்குமானால், பயமுறுத்தலை விட்டு விட்டுச் சமரச முறையில் பரிகாரம் தேட முற்படவேண்டும்"

என்று மேலும் 'தினத்தந்தி' கூறுகிறது. சமரச முறை என்று 'தினத்தந்தி' எந்தவிதமான எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு கூறுகிறதென்பது விளங்கவில்லை. தமிழ்நாட்டிலும் இந்தி கட்டாயபாடம் தான் என்று சர்க்கார் அறிக்கை வெளியிட்ட நாளில் இருந்து; நாம் அத்தகைய கட்டாயத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்பதைப் பத்திரிகை வாயிலாகவும், பொதுக்கூட்டங்கள் வாயிலாகவும், மாநாடுகள் வாயிலாகவும் சர்க்காருக்குத் தெரிவித்து வந்திருக்கிறோம். இந்திக் கட்டாயத் திட்டத்தை எடுத்துவிடும்படி நேசமனப்பான்மையுடனேயே கேட்டும் வந்தோம். தனிப்பட்ட முறையில் அல்ல, தமிழ்ப் பேரறிஞர்களுடையவும், பொதுமக்களுடையவும் ஆதரவைப் பெற்ற தீர்மானங்களை நிறைவேற்றி அவற்றின் வாயிலாகவும் சர்க்காரைச் சமரச முறையிலேயே கேட்டுப்பார்த்தோம். சர்க்கார் இணங்கி வரவில்லை. ஒருமுறை பாடிய பல்லவியையே மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டிருந்தது. பொது மக்கள் விரும்பாத ஒரு திட்டத்தைச் சர்க்கார் புகுத்துமானால், அங்ஙனம் செய்வது முறையல்லவென்று பொதுமக்கள் எந்த முறையில் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று 'தினத்தந்தி' நினைக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. ஒருவேளை, யாராவது தனிப்பட்ட முறையில்சர்க்காரை அணுகி இந்த ஏற்பாட்டைக் கைவிட்டு விடும்படி கேட்டுக்கொள்வதுதான் சமரச முறை என்று 'தினத்தந்தி' எண்ணினால், அந்த முறையையும் கையாண்டு பார்த்தாய் விட்டது என்பதைத் 'தினத்தந்தி'யே 10-8-48-ல் வெளியிட்டிருக்கிறது.

"ஈ. வே. ரா. பிரதமரைச் சந்தித்துங் கூட எந்தவிதமான சமரச முடிவும் ஏற்படவில்லை"

என்றஉண்மையை அப்பத்திரிகையே வெளியிட்டிருக்கிறது. தலைவர் பெரியார் அவர்கள் முதலமைச்சரைச் சந்தித்துக் கட்டாய இந்தித் திட்டத்தில் எவ்வளவு விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவு தொலைவு கழகத் திட்டத்திலிருந்து இறங்கி வந்து கேட்டுங்கூட முதலமைச்சர் இணங்கி வரவில்லை.

"இப்போது சர்க்கார் வகுத்திருக்கும் இந்தித்திட்டத்தில் அணுவளவும் விட்டுக்கொடுக்க முடியாது"

என்று முதலமைச்சர் கண்டிப்பாகக் கூறிய பின்னரே, இனி நேரடி நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு நாம் வந்தோம். இது 'தினத்தந்தி'க்கும் தெரியும். என்றாலும், இந்திஎதிர்ப்பு நேரடி நடவடிக்கை எந்தவிதமான சமரசமும் செய்யப்படாமல் அவசரமாகத் தொடங்கப்பட்டு விட்டதென்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாமல், "இந்தி எதிர்ப்பைச் சாக்காக வைத்துக்கொண்டு சர்க்காரை எதிர்க்க இவர்கள் கிளம்பி இருக்கிறார்கள்" என்று, யாருடைய மிரட்டலுக்கோ பயந்து கூறும் பாவனையில் எழுதியிருக்கிறது.

"தினத்தந்தி" மேலும் ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறது அதாவது,

"இந்தி எதிர்ப்பாளர்கள் வெளிப்படையாகக் கூறும் நோக்கத்திற்கும், கல்வி மந்திரியின் நோக்கத்திற்கும் இடையில் அதிக வித்தியாசமில்லை. இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கக் கூடாது என்பதுதான் கல்வி மந்திரியின் நோக்கம்"

என்று 10—8—48-ல் எழுதியிருக்கிறது. எனவே, இந்தி எதிர்ப்பாளர்களின் நோக்கத்திற்கும் கல்வி அமைச்சரின் நோக்கத்திற்கும் இடையே அதிக வித்தியாசமில்லை என்று 'தினத் தந்தி' கூறுவது உண்மையானால், கல்வியமைச்சர் தம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த ஏற்பாட்டை மாற்றியிருக்கலாம். ஒரு மாகாணத்திலுள்ள மக்களின் கல்வித் துறைக்குத் தலைவராய் இருக்கும் ஒருவர், தமக்கும் பொது மக்களுக்கும் சரியென்று பட்டதைத் தைரியமாகச் செய்ய முடியாமல், ஒருசிலரின் மிரட்டலுக்கு அஞ்சித் தம்முடைய திட்டத்தை விட்டுக் கொடுத்துவிட்டு, வெறும் பொம்மை மாதிரிப் பதவியில் ஒட்டிக் கொண்டிராமல் வெளியேறுவதே அறிவுடைமையாகும் என்று அமைச்சருக்கு அறவுரை கூறுவதை விட்டுக், கல்வியமைச்சரின் நோக்கத்தை நிறைவேற்றும் பணியையே செய்யும் இந்தி எதிர்ப்பாளர்களை, "காங்கிரசை எதிர்க்கும் சூழ்ச்சியைச் செய்கிறார்கள்" என்று யாருடையவோ மிரட்டலுக்குப் பயந்தவன் செய்யத்தகாத காரியத்தைச் செய்ய முற்படுவதுபோல், நாலு நாட்களுக்குள் 'தினத் தந்தி' ஏன் தன்னுடைய போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். —

6-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் மொழிக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் நடத்தப்படும் நேர்மையான கலாச்சாரப் போராட்டமென்பதும் நன்கு விளங்குவதோடு, முதலமைச்சர் இந்தி கற்கவேண்டுமென்பதற்குக் கூறும் போலிச் சமாதானத்தின் உட்பொருள் என்ன என்பதும் வெளிப்படையாகத் தெரிந்துவிடும். —

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press.
95, Tirukkachinambi Street Conjeeveram.